முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை
அசல் வழக்கு எண் – 79/2022

**வாதி தரப்பு சாட்சி–1 சண்முகம் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 15.04.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>**

1) தாவாவில் கண்ட விபரங்களை நான்தான் வழக்கறிஞருக்கு சொன்னேன். எனது தகப்பனார் மாணிக்கம் ஆசாரிக்கு நானும், 2 சகோதரிகளும் வாரிசுகள் ஆகும். நான் இவ்வழக்கை தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, எனது சகோதரிகளுக்காகவும் தாக்கல் செய்துள்ளேன். எனது சகோதரிகள் அமிர்தம் மற்றும் ஈஸ்வரிக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். எனது சகோதரி ஈஸ்வரி இறந்துவிட்டார், அவருக்கு வாரிசுகள் கிடையாது. எனது சகோதரி அமிர்தத்திற்கும் வாரிசு யாரும் இல்லை. எனது சகோதரி ஈஸ்வரிக்கு இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது சகோதரி அமிர்தம் சற்று முளை வளர்ச்சி குறைவாக இருந்தார் என்றால் சரிதான். அவருக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். தாவா சொத்து விபரத்தில் எதன் அடிப்படையில் நான்கெல்லை குறிப்பிட்டுள்ளேன் என்றால் வா.சா.ஆ.3, ஆவண எண் 847/1972 ன் அடிப்படையில் போட்டுள்ளேன்.

2) வா.சா.ஆ.3 வீரப்ப கவுண்டர் என்பவருக்கு ஒரு வருடத்திற்கு ஈட்டு அடமானக்கடன் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியை எதற்காக இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் 1973ம் வருடம், வா.சா.ஆ.29 ஆவண எண் 4406/1973 ன்படி மோசடியாக வாரிசுகள் இருந்தும் எனது தகப்பனாரிடம் கிரையம் வாங்கியதால் சேர்த்துள்ளேன். வா.சா.ஆ.5 ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். மேற்படி ஆவணத்தில் ஆறுமுகம் ஆசாரி மகன் மாணிக்கம் ஆசாரி என்பது எனது தகப்பனார் என்றால் சரிதான்.

மேற்படி ஆவணத்தில் இளவர் சண்முகம் என கண்டுள்ளது நான்தான். அதில் உள்ள ரெத்தினம் என்பவர் எனது சித்தப்பா. அவர் தற்போது இறந்துவிட்டார். மேற்படி நபர்கள் அனைவரும் சேர்ந்துதான் வா.சா.ஆ.29 ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்றால் சரிதான்.

3) வீரப்ப கவுண்டர் மகன் பழனியப்பன் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. சேகர் கவுண்டர் மகன் நாகலிங்கம் என்பவரை தெரியுமா என்றால் தெரியும், அவர் இறந்துவிட்டார். வா.சா.ஆ.29 ஆவணத்தின் 2ம் பக்கத்தில் வீரப்ப கவுண்டர் மற்றும் சிலரிடம் வாங்கிய கடனை தீர்ப்பதற்காக தொகை சாட்டுதல் செய்து வா.சா.ஆ.29 ஆவணம் இசக்கியம்மாள் பெயரில் கிரையம் செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3ல் கண்டுள்ள கடன் தொகையை வட்டியுடன் சேர்த்து வா.சா.ஆ.29ல் செலுத்தப்படுவதாக சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் தற்போதுவரை கடனை கட்டவில்லை. பொதுவாக ஈட்டுக்கடன் ஆவணத்தை ரத்து செய்ய வேண்டும் எனில் தரப்பினர் இருவரும் சேர்ந்துதான் செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

4) 1973ல் எனக்கு 4 வயது. இசக்கியம்மாள், மாணிக்கம் ஆசாரியால் பெறப்பட்ட கடனை தீர்த்துவிட்டார்களா, இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, இன்றைய தேதிவரை தீர்க்கவில்லை. வீரப்ப கவுண்டர் இருக்கிறாரா என்றால் இறந்துவிட்டார். எப்போது இறந்தார் என்றால் தெரியவில்லை, பல ஆண்டுகள் இருக்கும், எனக்கு விபரம் தெரிவதற்கு முன்பு இறந்துவிட்டார். வீரப்ப கவுண்டருக்கு வாரிசுகள் இருக்கிறார்களா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.29 ல் கண்டுள்ளபடி இசக்கியம்மாள் வீரப்ப கவுண்டருக்கு கொடுக்க வேண்டிய பணத்தை 1973லேயே கொடுத்து தீர்த்துவிட்டார் என்றால் சரியல்ல.

5) வீரப்ப கவுண்டரோ, அவரது வாரிசுகளோ, மாணிக்கம் ஆசாரி செலுத்த வேண்டிய கடனை கேட்டு எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், வீரப்ப கவுண்டர் இறந்து விட்டதால் எடுக்கவில்லை. தாவா சம்பந்தமாக வீரப்ப

கவுண்டர் வாரிசுகளுக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஈட்டுக்கடன் ஆவணம் குளித்தலை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தின் காலக்கெடு முடிவடைந்த நிலையில்தான், வா.சா.ஆ.29 ன் கிரைய ஆவணம் எனது தகப்பனாரால் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சி மீண்டும் காலக்கெடு முடிந்த பின்னிட்டுதான் வா.சா.ஆ.29 ஏற்படுத்தப்பட்டது என்று கூறுகிறார். நான் இவ்வழக்கை ஆவண எண் 229/92 ஆவணம் செல்லாது என கேட்டுதான் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது முதல் சாட்சிய விசாரணையில் கூடுதலாக 2 பரிகாரங்களை சேர்த்து கேட்டுள்ளேன் என்றால் சரிதான்.

6) அசல் வழக்குரையில் இல்லாத பரிகாரங்களை எனது முதல் சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளதால் எனது முதல் சாட்சியமே ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஆவண எண் 4406/1973 யாரால் எழுதப்பட்டது என்றால் மாணிக்கம் ஆசாரி, இசக்கியம்மாளுக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணம் ஆகும். ஆவண எண் 4456/1973 என்பதுதான் வா.சா.ஆ.5 என்றால் சரிதான். வா.சா.ஆ.5 தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. பட்டா எண் 170 ற்கு மூல ஆவணமாகும். வா.சா.ஆ.5 ல் மாணிக்கம் ஆசாரியோ, இசக்கியம்மாளோ தரப்பினர் அல்ல என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி யாருக்கு சொத்தை எழுதி வைத்தார் என்றால், ஆண்டியப்பன், மாரியப்பன், சிறும்பாயி ஆகியோருக்கு வா.சா.ஆ.4 ஆவண எண் 229/1992 மூலம் எழுதி கொடுத்துள்ளார். சிறும்பாயி மகன்கள்தான் ஆண்டியப்பன், மாரியப்பன் என்றால் சரிதான்.

7) வா.சா.ஆ.4 ஆவணத்தில் கண்ட சிறும்பாயி, ஆண்டியப்பன், மாரியப்பன் மூவரும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். மாரியப்பன் மனைவி 3ம் பிரதிவாதி வெள்ளையம்மாள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி மாரியப்பன் மகன் என்றால் சரிதான். ஆண்டியப்பன் வாரிசுகள் தான் 4, 6 முதல் 8 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி யார் என்றால், பழனியப்பன்.

அவர் இந்த வழக்கின் தரப்பினர் இல்லை. நான் 5ம் பிரதிவாதியை தவறுதலாக சேர்த்து விட்டேன் என அவரை நீக்கம் செய்ய தற்போதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் தரகம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வா.சா.ஆ.4 ஆவணத்தில் இசக்கியம்மாள் தன் பெயரில் பட்டா எண் 170 ஏற்பட்டு தீர்வை செலுத்தி வருகிற நிலத்தை கிரையம் செய்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். பட்டா எண் 170 இசக்கியம்மாள் பெயரில் உள்ள சொத்தைத்தான் சிறும்பாயிக்கு கிரையம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

8) தாவா சொத்தின் தென்மேற்கில் ஒரு கிணறு உள்ளது என்றால் சரிதான். அந்த கிணற்றில் தண்ணீர் இல்லை என்றால் சரிதான். மின்சார மோட்டார் உள்ளது என்றால் இல்லை, 5 குதிரை திறன் கொண்ட மின் இணைப்பு மட்டும் உள்ளது. மின் இணைப்பு எண் 02 ஆகும். வா.சா.ஆ.4 ஆவணத்தில் மேற்படி மின் இணைப்பு இரண்டையும் சேர்த்துதான் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து விபரத்தில் மின் இணைப்பு எண் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வடபுறம் பஞ்சப்பட்டி ஏரிக்கு செல்லக்கூடிய வடிநீர் வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் மேற்குபுறம் பழனியப்பன் இடமா என்றால் இல்லை, ஆனைக்குட்டி என்பவர் இடம். கிழபுறம் உள்ள வீடு யாருடையது என்றால் காளியப்பனுடையது. தெற்கில் உள்ள இடம் சுப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்டது.

9) தாவா சொத்தின் 1992ல் வா.சா.ஆ.4 ஏற்பட்ட பின்னிட்டு வேறு எந்த வில்லங்கமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து வா.சா.ஆ.4 ஆவணத்தின் படி அதன் கிரையதாரர்களான சிறும்பாயி, ஆண்டியப்பன், மாரியப்பன் ஆகியோர் வாரிசுகளுக்கு மட்டும் சொந்தம் என்றால் சரியல்ல. வருவாய்துறை ஆவணங்களும் பிரதிவாதிகளின் பெயரில்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் பிரதிவாதிகள் பெயரில்

தாக்கல் செய்த பதிலுரையை படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். பிரதிவாதிகள் தங்கள் பதிலுரையில் தாவா சொத்து தங்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், அதில் எனக்கு உரிமையில்லை என கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து எனக்குத்தான் பாத்தியப்பட்டது, எனது அனுபவத்தில் உள்ளது, எனக்கு மட்டுமே உரியது என விளம்புகை பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சொத்து எனது அனுபவத்தில்தான் உள்ளது. தாவா சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதைக் காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

10) வா.சா.ஆ.4 ஆவணத்தை செல்லத்தக்கதல்ல என விளம்புகை கேட்க எனக்கு எந்த அறுகதையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ எனக்கு சம்பந்தப்பட்ட ஆவணம் அல்ல என்றால் சரியில்ல. வா.சா.ஆ.4 ஆவணத்திற்கு முந்தைய ஆவணங்கள் நடைமுறையில் உள்ள நிலையில் வா.சா.ஆ.4 ஆவணத்தை பொறுத்து செல்லாது என விளம்புகை கேட்கமுடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் இசக்கியம்மாள் தாவா சொத்தை தனக்கு ஆவண எண் 4456/1973 என்று குறிப்பிட்டு எழுதியுள்ளார் என்பதுதான் தவறு என கட்சி செய்கிறேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.4 ஆவணத்தில் கண்டுள்ள ஆவணங்களை குறித்து அதில் தரப்பினரே இல்லாததால் நான் கேள்வி கேட்க இயலாது என்றால் சரியல்ல.

11) வா.சா.ஆ.4 ஆவணத்தின் மூல ஆவணமாக ஆவண எண் 4406/1973 என குறிப்பிட்டிருந்தால் வா.சா.ஆ.4 ஆவணம் சரியானது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் ஏற்பட்ட தவறானது தட்டச்சு பிழை காரணமாக ஏற்பட்ட பிழை என்றும், எனவே அந்த பிழையின் காரணமாக வா.சா.ஆ.4 ஆவணமே செல்லாது என கேட்பது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.29 ஆவணத்தை உரிய காலத்திற்குள் ஆட்சேபனை செய்யாமல், தற்போது வா.சா.ஆ.4 ஆவணத்தில் கண்டுள்ள தட்டச்சு பிழையை

பயன்படுத்தி பிரதிவாதிகளிடம் இருந்து தாவா சொத்தை அபகரிக்க பொய்யான காரணங்களால் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

12) தாவா சொத்தானது 2 முதல் 4 மற்றும் 6 முதல் 8 பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமை மூலமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான உரிமை குறித்து விளம்புகை பரிகாரம் கேட்காமல், வா.சா.ஆ.4 ஆவணத்திற்கு மட்டும் விளம்புகை பரிகாரம் கேட்டிருப்பது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தின் உரிமை மற்றும் அனுபவம் 2 முதல் 4 மற்றும் 6 முதல் 8 பிரதிவாதிகள் வசம் உள்ளதால் அவர்களுக்கு எதிராக இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இவ்வழக்கு பிரச்சினையை தீர்மானிக்க உதவாது என்றால் சரியல்ல.

9 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**